# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 2 சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம்

நாள்: 16.09.2020 நேரம் : காலை 9-00 – 9.50

பாட ஆசிரியர்

முனைவர் இ.சேனாவரையன்

தமிழ் உதவிப்பேராசிரியர்

அரசு கலைக்கல்லூரி ( தன்னாட்சி)

கோயம்புத்தூர் - 641018. அலைபேசி: 9486772491

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 2 சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம் நாள்: 16.09.2020 நேரம் : காலை 9-00 – 9.50

சீவக சிந்தாமணி – சமண சமய அறிமுகம் - நூற்குறிப்பு - குணமாலையார் இலம்பகம் கதைச்சுருக்கம்

சமண சமயக் காப்பியம் என்பதால் சமணசமயக்குறிப்புகள்:

வடக்கே தோன்றிய சமணசமயம் கி.பி மூன்றாம் நூற்றாண்டில் சந்திரகுப்தர்( 322-298) காலத்தில் பத்திரபாகு முனிவர் மூலம் தமிழகத்திற்கு வந்தது. களப்பிரர் ஆட்சியால் கால்கொண்டது.

படிப்படியாகச் செல்வாக்கு பெற்று வச்சரநந்தியின் திரமிள சங்கம் போன்றவற்றால் பரவியது. அத்தோடு அருந்தமிழும் பல்கிப் பெருகியது.

பல்துறையில் பொலிவுற்றது.

சமணம் போன்று வேறு எச்சமயமும் இத்துணையளவு நூல்களை இயற்றிவில்லை என்னும் அளவிற்கு அதனை ஒரு கலையாகவே வளர்த்தது.

எண்ணற்ற இலக்கணங்களையும் இயற்றியது. அனைவருக்கும் எளிமையாக புரியும் வகையில் சீர் பிரித்து வழிகாட்டினர்.

தமிழில் அகர வரிசை இல்லாக் குறையைப் போக்கி நிகண்டுகளை வழங்கியது. காப்பியங்கள் பல இயற்றி காப்பியநெறி உணர வைத்தது. காப்பியங்கள் பல இயற்றி காப்பியநெறி காட்டியது

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 2 சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம் நாள்: 16.09.2020 நேரம் : காலை 9-00 – 9.50

- உரைநடையிலும் சமணர்களின் பங்கு மிகுதியாகும்.
- யாப்பில் விருத்தம், வெண்பா போன்றவற்றிற்கும் வளர்நிலை தந்தது. பிரபந்தங்கள் பல படைத்தனர்.
- நீதி நூல்களை அதிகமாக படைத்து தந்துள்ளனர்.
- காப்பியம் மற்றும் இலக்கண நூல்களுக்கு உரைகள் வகுத்துள்ளனர்.
- வாய்பாடு வானநூல், கணிதம், சோதிடம், போன்ற வகையிலும் சமணர்கள் தமிழ்ப்பணி புரிந்துள்ளனர்.
- சமணர்கள் பள்ளிகள் நிறுவி இளமை முதல் போதித்தது வந்தனர். இலக்கண இலக்கியத் துறையில் புதிய போக்குகளைப் புகுத்தியது.

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 2 சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம் நாள்: 16.09.2020 நேரம் : காலை 9-00 – 9.50

- சங்கம் வைத்து மொழி வளர்த்தது.
- புராணங்கள் பல பாடி தமிழுக்கு வளமை சேர்த்துள்ளது.
- தாய்மொழி வாயிலாகவே கற்பித்து வந்துள்ளனர். பிராகிருதச் சொற்கள் தமிழில் கலக்கச்செய்துள்ளனர்.
- இவர்கள் தமிழ்த்தொண்டு இருவகையாகப் பிரிக்கலாம்.
- 1. தேவாரக்காலத்திற்கு முந்தைய நிலை.
- 2. தேவாரக்காலத்திற்கு பிந்தையநிலை என்பதாகும்.
- தேவாரக்காலத்திற்கு முந்தைய நிலையில் செயலாற்றியுள்ளனர். சுமய நோக்கத்தையே முதல் நோக்காகக் கொண்டு அற, சமய நூல்கள் இயற்றியுள்ளனர். மக்கள் ஆதரவு பெறாது போயினர்.
- தேவாரக் காலத்திற்கு பின்னர் சமண சமயத்தினர் மக்களை ஈர்க்கும் வகையில் இலக்கிய இலக்கண நூல்களை எழுதி பயன்பாட்டுக்கு தந்துள்ளனர். துமிழ் மொழியும் வளம் பெறும் வகையில் செயலாற்றியுள்ளனர்.

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 2 சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம் நாள்: 16.09.2020 நேரம் : காலை 9-00 – 9.50

- சீவக சிந்தாமணி – நூற்குறிப்பு
- ஐம்பெருங்காப்பியங்களில் முதலில் வைத்து எண்ணப்படுவது. நூலின் தன்மையாலும் சிந்தாமணி எனச் சீவகன் புனைந்துரைக்கப்பெறுவதாலும் இப்பெயர் பெற்றது.
- சீவகனை ஒட்டிய நிகழ்ச்சிகள் அனைத்தையும் மணத்தோடு இணைத்து பாடியுள்ளதால் இந்நூலுக்கு மண நூல் என்று பெயருமுண்டு.
- காந்தருவத்தை
- குணமாலை
- பதுமை
- கேமசரி
- கனகமாலை
- விமலை
- சுரமஞ்சரி
- இலக்கணை
- என்னும் பெயருடைய எட்டு பெண்களை மணப்பதாகக் கூறியுள்ளமையால் மணநூல் என்னும் பெயர் பெற்றது.

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 2 சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம் நாள்: 16.09.2020 நேரம் : காலை 9-00 – 9.50

- சீவக சிந்தாமணி கல்வியால் கலைமகளையும், செல்வத்தால் அலைமகளையும், ஆட்சியால் மண்மகளையும் வீடுபேற்றால் முத்தி மகளையும் மணப்பதாகச் சுட்டுவதாலும் இதனை மணநூல் என்று கூறுவது ஏற்புடையதாகும்.
- சீவகசிந்தாமணியின் தலைமைக்கதாப்பாத்திரம் சீவகனும் சமண சமயத்தவன். இயற்றிய திருதக்கத்தேவரும் சமணர் ஆவர்.
- காப்பிய அமைப்பு:
- நாமகள் இலம்பகம் முதல் முத்தியலம்பகம் வரை 13 இலம்பகங்களைக் கொண்டது.
- 3145 செய்யுட்களை கொண்டது.
- இலக்கியச்சுவையும் தமிழினிமையும் அமையப்பெற்றது.
- இந்நூலுக்கு நிகராக வேறொரு நூல் தமிழிலக்கியத்தில் இல்லை.
- கம்பன் காப்பியம் கூட இதற்குப் பின்தான் எனலாம்.

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 2 சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம் நாள்: 16.09.2020 நேரம் : காலை 9-00 – 9.50

- விருத்தப்பாவில் அமைந்த முதல் காப்பியம்.
- பின்னெழுந்த பெருங்காப்பியங்கள் விருத்தத்தில் அமைய வழிகாட்டி நூல் எனலாம்.
- சக்ர சூளாமணி, கத்திய சிந்தாமணி போன்ற வடநூல்களைத் தழுவி எழுந்த நூல் ஆகும்.
- சேத்திர சூடாமணியைப் பின்பற்றி எழுதப்பெற்றதாகும்.
- வடமொழி மகாபுராணத்தில் உத்திர பாகத்தில் சீவகன் சரிதை உள்ளது.
- இந்நூல் பத்தாம் நூற்றாண்டைச்சேர்ந்தது.
- உறுதிப்பொருள் நான்கையும் உரைப்பதால் அடியார்க்குநல்லார் இதனை முடிபொருள் தொடர்நிலைச்செய்யுள் என்று குறிப்பிட்டுள்ளார்.
- சைனர்கள் உச்சிமேல் கொண்டு உயர்வாகக் கருதுகின்றனர்

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 2 சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம் நாள்: 16.09.2020 நேரம் : காலை 9-00 – 9.50

- சீவகசிந்தாமணியின் கருத்தும் சொல்லும் உவமைகளும் இசுலாமிய கிருத்துவப் புலவர்களாலும் தாராளமாக எடுத்தாளப்பெற்ற எற்றத்தக்க தமிழிலக்கிய இலியத் ஒடிசி எனப்புகழ்கிறார் ஜி.யு.போப்.
- கதைச்சுருக்கம்
- ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன்.
- ஆரசி விசையை மீது தீராத அன்பு கொண்டு நாட்டை ஆளும் பொறுப்பை அமைச்சன் கட்டியங்காரனிடம் ஒப்படைத்தான்.
- கட்டியங்காரன் சூழ்ச்சி செய்து நாட்டைக் கைப்பற்றி அரசனையும் கொன்றான்.
- அரசி விசயையை கொல்லத்துணிந்த போது சச்சந்தன் உருவாக்கய வான்வழி வாகனமான மயிற்பொறியைக் கொண்டு அதன் மூலம் தப்பி சென்றாள்.
- அச்சமயத்தில் கற்படைந்திருந்த அரசி விசயை மயிற்பொறி மூலம் சென்றவள் மயிற்பொறியின் எரிபொருள் தீர சுடுகாட்டில் மயிற்பொறி இறங்கியது.

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 2 சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம் நாள்: 16.09.2020 நேரம் : காலை 9-00 – 9.50

- அங்கு அரசி விசயை சீவகனைப் பெற்றெடுக்கிறாள்.
- சீவகன் வாலிபப்பருவம் எய்தி வீரத்திலும் இசையாற்றலிலும் உயர்வு பெற்று எண்மரை மணக்கிறான்.
- இறுதியில் ஏமாங்கத நாட்டின் மீது படையெடுத்து கட்டியங்காரனை வென்று அரசினை ஏற்கிறான்.
- இவ்வுலக இன்பங்கள் யாவும் துய்த்து இறுதியில் துறவு மேற்கொள்கிறான். காப்பியத்தின் கருத்து காதலேயாயினும் முடிவாக வற்புறுத்தப்பெறுவது அறமே ஆகும்.
- சிந்தாமணியின் சிறப்பு: துறவி தந்த காப்பியம். திருத்தக்கத்தேவர் எழுதியது. இசை, மருத்துவம், மந்திரம், சோதிடம், படை, சுண்ணம், காதல் ஆகிய பல்கலைச் செய்திகள் சிறப்புடன் பாடப்பெற்றுள்ளன. கற்பனை அழகும், வருணனை வளப்பமும் செய்யுளோட்டமும் சிந்தாமணியைச் செந்தமிழ் சிந்தும் நந்தா விளக்கமாகச் சிறந்திடச் செய்துள்ளன.

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 2 சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம் நாள்: 16.09.2020 நேரம் : காலை 9-00 – 9.50

- சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம் வினாக்கள்
- 1. சீவகசிந்தாமணியின் ஆசிரியர் யார்?
  2. சீவகசிந்தாமணி எந்த சமயத்தைச் சார்ந்தது?
  3. சீவகசிந்தாமணி எத்தனை இலம்பகங்களைக் கொண்டது?
  4. சீவகசிந்தாமணியில் எத்தனை செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன?
  5. சீவகசிந்தாமணியின் தலைமைக்கதாபத்திரம் யார்?
  6. சீவகனின் தாய் பெயர் என்ன?
  7. சீவகனின் தந்தை பெயர் என்ன?
  8. சீவகசிந்தாமணியில் குறிப்பிடப்படும் நாடு எது?
  9. சீவகசிந்தாமணியில் சீவகன் மணந்த எட்டு மகளிரின் பெயர்களை எழுதுக.
  10. சீவகனின் நண்பர்கள் பெயர்களை எழுதுக.
  11. சீவகனின் வளர்ப்பு தாய் தந்தையின் பெயர்களை எழுதுக.
  12. சீவகனை மணப்பதற்காகத் தவம் புரிந்தவள் யார்?
  13. சீவகன் பிறந்த இடம் எது?
  14. அரசி விசயை எதன் மூலம் அரண்மனை விட்டு வெளியேறினாள்?
  15. குணமாலையின் பெற்றோர் பெயர் என்ன?

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 2 சீவக சிந்தாமணி – குணமாலையார் இலம்பகம் நாள்: 16.09.2020 நேரம் : காலை 9-00 – 9.50

- குறுவினாக்கள்
- 1. சீவகசிந்தாமணி நூற்குறிப்பு எழுதுக. 2. சீவகசிந்தாமணியில் குணமாலையார் இலம்பகத்தின் கதைச்சுருக்கத்தினை எழுதுக.
  3. சீவகனின் நண்பர்கள் குறித்து எழுதுக.
  4. சீவகன் மீது கட்டியங்காரன் மேற்கொண்ட செயல்களை எழுதுக.
  5. சீவகன் பிறப்பின் ரகசியத்தை திருத்தக்கத்தேவர் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?
- நெடுவினா
- 1. குணமாலையார் இலம்பகத்தில் திருத்தக்கத்தேவர் கூறியுள்ள கதை நிகழ்வுகளை எழுதுக.
  2. குணமாலையார் இலம்பகத்தில் உவமைச்சிறப்புகளை எழுதுக.
  3. ஏமாங்கத நாட்டின் இயற்கை வளங்கள் குறித்து திருத்தக்கத்தேவர் கூறியுள்ளவற்றை எழுதுக.